**Gladys Berejiklian**
Premier of NSW

**John Barilaro**
Deputy Premier

**Brad Hazzard**
Minister for Health and Medical Research

# அறிக்கை

வெள்ளிக்கிழமை, 20 ஆகஸ்டு 2021

## தடுப்பூசி இலக்குகளை நோக்கி நியூ சவுத் வேல்ஸை எடுத்துச் செல்ல, புதிய பாதுகாப்புகள் மற்றும் உடன்பாட்டுச் சட்டங்கள்

பெருகிவரும் டெல்டா பெருந்தொற்றுக்குப் பதிலடியாக, நியூ சவுத் வேல்ஸ், சிட்னி பெருநகரில் (Greater Sydney) உள்ள தற்போதைய முழு அடைப்பை (lockdown) செப்டம்பர் இறுதிவரை நீட்டிக்கும், அத்துடன் மிகப் பெரும்பாலான எண்ணிக்கையில் புதிய நோய்த்தொற்றுகள் தோன்றி வெளியாகிக் கொண்டிருக்கும் கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளைக் குறிவைத்து, புதிய விதிமுறைகளையும் அறிமுகப்படுத்தும்.

நியூசவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையும், காவல்துறையும் இணைந்து செயலாற்றி, தொற்றுப் பரவலைக் குறைப்பதற்கும், உடன்பாட்டை உறுதிசெய்வதற்கும், மாநிலத்துக்கான கூடுதல் கோவிட் கட்டுப்பாடுகளின் தொகுப்பை உருவாக்கியுள்ளன.

**கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளுக்கான (LGAs of concern) கூடுதல் விதிமுறைகள்:**

**ஆகஸ்டு 23, திங்கட்கிழமை அதிகாலை 12.01 மணி** முதல், பின்வரும் **கூடுதல் விதிகள்** கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், வணிகங்களுக்கும் பொருந்தும்:

- இளைஞர்களின் நடமாட்டத்தைக் குறைக்க உதவும் வகையில், இரவு 9 மணி முதல் அதிகாலை 5 மணி வரை (அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள், அவசரநிலைமை அல்லது மருத்துவப் பராமரிப்பு தவிர) ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும்;
- வெளிப்புற உடற்பயிற்சி ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் என வரையறுக்கப்பட்டுள்ளது;
- சொடுக்கிப் பெற்றுக்கொள்ளும் (click and collect) வணிகம் தவிர பின்வரும் சில்லறை வணிக வளாகங்கள் கட்டாயம் மூடப்படவேண்டும்: தோட்ட மையங்கள் மற்றும் செடி வளர்ப்புப் பண்ணைகள், அலுவலகப் பொருட்கள், இரும்புச் சாமான்கள் (hardware) மற்றும் கட்டுமானப் பொருட்கள் (building supplies), நிலச் சமனப்படுத்தும் பொருட்கள் (landscaping material supplies), கிராமப்புறப் பொருட்கள் (rural supplies), மற்றும் செல்லப் பிராணிக்கான சாமான்கள் (pet supplies) (வர்த்தகர்கள் பொருத்தமானதாக இருக்கும்

பட்சத்தில், கடைகளில் பொருட்கள் வாங்க அனுமதிக்கப்படுகிறார்கள்); மற்றும்

- அனைத்து தேர்வுகளும், பிற கல்வி அல்லது தொழில்திறன் வளர்ச்சி (professional development) தொடர்பான செயல்பாடுகள், உயர்நிலைப் பள்ளி சான்றிதழ் படிப்பு (HSC) தவிர்த்து, இணையத்துக்கு (online) மாற்றப்படும். அரசாங்கம் தனது கல்வித் திட்டம் குறித்த கூடுதல் தகவல்களை உரிய நேரத்தில் வழங்கும்.

கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளில் உள்ள **பணியிடங்கள் மற்றும்** <u>அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள்</u> தொடர்பாகப் பின்வரும் புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்:

- கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளில் வசிக்கும் அல்லது பணிபுரியும் குழந்தைப் பராமரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் ஊனமுற்றோர் ஆதரவுத் தொழிலாளர்கள் தங்களுடைய முதல் தடுப்பூசி மருந்தை ஆகஸ்டு 30-க்குள் போட்டிருக்க வேண்டும்;
- கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளுக்கு வெளியே பணிபுரியும் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள், அவர்களுடைய பணியிடத்தில் விரைவான ஆன்டிஜென் சோதனை (rapid antigen testing) செயல்படுத்தப்பட்டாலோ **அல்லது** ஆகஸ்டு 30-க்குள் அவர்கள் தங்கள் முதல் தடுப்பூசி மருந்தைப் போட்டிருந்தாலோ மட்டுமே வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.
- ஆகஸ்டு 28, சனிக்கிழமை முதல், கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள், அவர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளி, அத்துடன் வீட்டிலிருந்து வேலை செய்ய முடியாது என்று சான்றளிக்கும் ‘நியூ சவுத் வேல்ஸ் சேவை’ (Service NSW) -இன் அனுமதி (permit) ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும்; மேலும்
- ஆகஸ்டு 28, சனிக்கிழமை முதல், வேலை செய்யும் நோக்கங்களுக்காக, கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளில் நுழையும் எவரும் ‘நியூ சவுத் வேல்ஸ் சேவை’ (Service NSW) வழங்கிய அனுமதி ஒன்றைக் கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும்.

ஆகஸ்டு 23, திங்கட்கிழமை அதிகாலை 12.01 மணி முதல், கேண்டர்பரி-பேங்ஸ்டவுன் (Canterbury-Bankstown), கம்பர்லேண்ட் (Cumberland) மற்றும் ஃபேர்ஃபீல்டு (Fairfield) உள்ளூர் அரசுப் பகுதிகளைச் (LGAs) சேர்ந்த தொழிலாளர்கள், தங்கள் உள்ளூர் அரசுப் பகுதிக்கு வெளியே வேலை செய்வதற்கு முந்தைய 72 மணி நேரத்தில் கோவிட்-19 பரிசோதனை செய்திருந்திருக்கத் தேவையில்லை.

**நியூ சவுத் வேல்ஸ் காவல்துறைக்குப் பின்வருவன உள்ளிட்ட, சிறப்பு அதிகாரங்களும் வழங்கப்படும்:**

- நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையானது கோவிட் அபாயத்தை மதிப்பீடு செய்யும் வேளையில், காவல்துறை ஆணையருக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கதவடைப்பு (lockdown) செய்யும் அதிகாரம்;
- காவல்துறை ஆணையருக்கு ஒரு குடியிருப்பு வளாகத்தை கோவிட்-அபாய வளாகம் என்று அறிவிக்கவும், அத்துடன் இணக்க சோதனைகளின் (compliance checks) போது, அனைத்து மக்களும் காவல்துறையிடம் ஆஜராக வைக்கவும் கூடிய அதிகாரம்;
- விதிமீறல் எச்சரிக்கை அறிக்கை வழங்கப்பட்ட ஒரு நபரை, அவர் குடியிருக்கும் இடத்துக்குத் திரும்பும்படி அறிவுறுத்த, காவல்துறைக்கு அதிகாரங்கள்; மற்றும்
- கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிக்கு (LGA of concern) வெளியில் இருந்து ஒரு நபர் நியாயமான ஒரு காரணம் இல்லாமல் கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதியில் இருப்பதைக் கண்டால், அவர்களுக்கு 1000 டாலர்கள் அபராதம் விதிக்கப்படும், அத்துடன் அவர்கள் 14 நாட்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

<u>சிட்னி பெருநகருக்கான (Greater Sydney) கூடுதல் நடவடிக்கைகள் (நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியம் உட்பட, ஆகஸ்டு 28 வரை)</u>

**ஆகஸ்டு 23, திங்கட்கிழமை அதிகாலை 12.01 மணி** முதல், சிட்னி பெருநகருக்கு (நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியம் உட்பட, ஆகஸ்டு 28 வரை) பின்வரும் கூடுதல் விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்படும்:

- உடற்பயிற்சி செய்யும்போது தவிர, உங்கள் வீட்டுக்கு வெளியே இருக்கும்போது முகக்கவசம் அணிவது கட்டாயமாக இருக்கும்.

ஆரம்பகால குழந்தைப்பருவக் கல்வி மற்றும் பராமரிப்பு சேவைகளில் அநேக தொற்றுநோய்ப் பாதிப்புகள் இருந்திருக்கின்றன, ஆகவே மாநிலம் முழுவதிலும் உள்ள பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும், அந்தச் சேவைகளில் இருக்கவேண்டிய தேவை இருந்தாலொழிய, தங்கள் குழந்தைகளை வீட்டிலேயே வைத்திருக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சமீபத்திய தகவல்களுக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: www.nsw.gov.au/covid-19

**MEDIA: Harriet Glenn | Premier | 0409 522 869**
**Georgina Kentwell | Deputy Premier | 0427 206 308**
**Julie Garvey | Minister Hazzard | 0448 569 746**